*கவனிக்க.- 2018.11.30 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* I : தொகுதி III மற்றும் பகுதி II ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2101 - 2018 දෙසැම්බර් මස 07 වැනි සිකුරාදා - 2018.12.07

*2101 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 07 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 2 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, திசெம்பர் மாதம் 14ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1 - B81475 - 5,403 (2018/12)

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## மேல் மாகாண அரச சேவையில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (வகுப்பு 111 மற்றும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (பயிற்சி தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018

மேல் மாகாண அரச சேவையில் கீழ்குறிப்பிட்டப்படும் பதவி வெற்றிடங்களுக்கு தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(i) மேல் மாகாண தொழில்நுட்ப சேவையில் கால்நடை அபிவிருத்தி போதானாசிரியர் (வகுப்பு 111)
(ii) மேல் மாகாண தொழில்நுட்ப சேவையில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (பயிற்சித் தரம்)

**01. 1.1 பொதுத் தகைமைகள்**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) மேல் மாகாணத்தின் எம்மாவட்டத்திலும் சேவையாற்றுவதற்குத் தகுதியான நல்ல மனோ மற்றும் உடல் ஆரோக்கிய நிலையில் இருத்தல் வேண்டும்.
(iii) மதகருவாக இருப்பவர்கள் விண்ணப்பிக் தகுதியற்றவர்கள் ஆவார்கள். சிறப்பான நன்னடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
(iv) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் ஆகக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்
(v) விண்ணப்பங்கள் கோரப்பட்ட விளம்பரத்திற்கமைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்தவராகவும் வயது எல்லையை கொண்டிருப்பவருமே தகுதியான விண்ணப்பதாரியாக கருதப்பட்டு பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்
(vi) நியமனம்பெற தகுதிபெற்றவர்கள் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதுடன் மேல் மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட எப்பகுதியிலும் சேவையாற்றவேண்டும்.
(vii) விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். தற்போது மாகாண அரச சேவையில் உள்ளவர்களுக்கு வயது எல்லை ஏற்புடையதாகாது. ஆயினும் தமது விண்ணப்பத்தை திணைக்களத் தலைவரூடாகவே சமர்ப்பிக்க வேண்டும்.

**02. சேவை நிபந்தனைகள்**

2.1 இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவுடையது. உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

**03. ஆட்சேர்ப்பு முறை**

திறந்த முறையின் கீழ் மட்டும்

3.1 கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (வகுப்பு 111) பதவிக்கு போதிய விண்ப்பங்கள் கிடைக்கப் பெறாது விடின் மாத்திரமே கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (பயிற்சி தரம்) இற்கு ஆட்சேர்ப்பு நடைபெறும். திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் புள்ளி ஒழுங்கு அடிப்படையில் தகுதிகளை பரீட்சிப்பதற்கான பொது நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தப்பட்டு ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். ஆகக் குறைந்த சித்திப் புள்ளி 40 ஆகும்.

3.2 எழுத்துப் பரீட்சை :

| பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | தகுதிப் புள்ளி வீதம் |
|---|---|---|---|
| நுண்ணறிவு பரீட்சை | 01 மணி | 100 | 40% |
| பாடப்பரப்புடனான தொழில்நுட்ப பரீட்சை | 02 மணி | 100 | 40% |

**04. தொழில்நுட்ப சேவையில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (வகுப்பு 111) மற்றும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (பயிற்சி தரம்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகள்**

| இல. | பதவி | க.பொ.த(சா./த.) தகைமைகள் | க.பொ.த(உ./த.) தகைமைகள் | தொழில்நுட்ப தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (வகுப்பு 111) | சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதத்துடன் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் ( 06) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி யடைந்திருத்தல் | க.பொ.த. (உ.த.) பரீட்சை யில் விலங்கியல், இரசாயனம், விவசாயம், தாவரவியல், பௌதீகவியல் (உயிரியல் பிரிவில்) ஆகிய பாடங்களிலிருந்து 03 பாடங்கள் ஒரே அமர்வில் (க.பொ.த. (சா.த.) பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந் திருத்தல் அல்லது விவசாயம் அல்லது விஞ்ஞான தொழில் நுட்பம் பாடம் அடங்கலாக உயிரியல் தொழில்நுட்பம் பிரிவில் 03 பாடங்கள் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த.) பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல் | 1. விலங்கு உற்பத்திகள் மற்றும் சுகாதார திணைக்களத்தால் அங்கீ கரிக்கப்பட்ட அரச கட்டுப்பாட்டு கட்டுப்பாட்டு கல்லூரி வழங்கிய விலங்கு கட்டுப்பாட்டில் தேசிய டிப்ளோமா<br><br>அல்லது<br><br>2. குண்டசாலை, அகுனகொல பெலேஸ்ஸ, பெல்லெஹரா, பிபிலே, பாலமுனை, லபுடுவ, வாரியபொல, வவுனியா, அனுராதபுரம், கருப்பின்கா, நெய்வாலா மற்றும் பரந்தன் ஆகிய விவசாயக் கல்லூரிகளிலிருந்து கால்நடை கட்டுப்பாடுகள் உள்ள டங்கிய விவசாய டிப்ளமோ சான்றிதழ் பெற்றிருப்பது.<br><br>அல்லது<br><br>3. மொறட்டுவ பல்கலைக்கழகத் திலிருந்து அல்லது அம்பாறை ஹார்டி தொழில்நுட்ப நிறுவனத் திலிருந்து கால்நடை கட்டுப் பாட்டுடன் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா (விவசாயத்தில்) பெற்றிருப்பது.<br><br>அல்லது<br><br>4. அக்வானஸ் பல்கலைக் கழகக் கல்லூரியில் டிப்ளமோ சான்றிதழை பெற்றிருப்பது.<br><br>அல்லது<br><br>5. அரசாங்க அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தால் வழங்கப்பட்ட கால் நடை கட்டுப்பாட்டுடன் இரண்டு வருட விவசாய டிப்ளமோ சான்றிதழைப் பெற்றிருப்பது.<br><br>அல்லது<br><br>6. இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் விலங்கு கட்டுப்பாடுடன் டிப்ளோமா (விவசாயத்தில்) பெற்றிருப்பது.<br><br>அல்லது<br><br>7. ஏனைய தகைமைகள் |

| இல. | பதவி | க.பொ.த(சா./த.) தகைமைகள் | க.பொ.த(உ./த.) தகைமைகள் | தொழில்நுட்ப தகைமைகள் |
|---|---|---|---|---|
| 2 | கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (ஒரு வருட பயிற்சி தரம்) | சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதத்துடன் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் ( 06) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தி யடைந்திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் விலங்கியல், இரசாயனம், விவசாயம், தாவரவியல், பௌதீகவியல் (உயிரியல் பிரிவில்) ஆகிய பாடங்களி லிருந்து 03 பாடங்கள் ஒரே தடவையில் (க.பொ.த. (சா.த.) பரீட்சை தவிர்ந்த) சித்தி அடைந்திருத்தல் அல்லது விவசாயம் அல்லது விஞ்ஞான தொழில்நுட்பம் பாடம் அடங்கலாக உயிரியல் தொழில்நுட்பம் பிரிவில் 03 பாடங்கள் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த.) பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந் திருத்தல் | 1. ஒரு வருட முழுநேர பயிற்சிக் கான தேசிய தொழில்நுட்ப (விவசாய) சான்றிதழ் குண்ட சாலை, அகுனகொல பெலேஸ்ஸ, பெல்வெஹரா, பிபிலே, பாலமுனை, லபுடுவ, வாரியபொல, வவுனியா, அனுராதபுரம், கரபின்சா, நெய்வல மற்றும் பரந்தன் விவசாய கல்லூரிகளிலிருந்து பெற்றிருத்தல். <br>அல்லது<br> 2. மூன்றாம் மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற ஒரு தொழில்நுட்பக் கல்லூரியில் இருந்து விவசாயம் தொடர் பான ஒரு ஆண்டு முழுநேர பயிற்சிப் பாடநெறியின் சான்றிதழை பெற்றிருத்தல். <br>அல்லது<br> 3. அக்வானஸ் பல்கலைக்கழகக் கல்லூரியில் விவசாயத்தில் ஒரு வருட சான்றிதழை பெற்றிருப்பது. |
| 3 | கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (இரண்டு வருட பயிற்சி தரம்) | சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதத்துடன் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் ( 06) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல். | க.பொ.த. (உ.த.) பரீட்சை யில் விலங்கியல், இரசாயனம், விவசாயம், தாவரவியல், பௌதீகவியல் (உயிரியல் பிரிவில்) ஆகிய பாடங்களிலிருந்து 03 பாடங்கள் ஒரே அமர்வில் (க.பொ.த. (சா.த.) பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந் திருத்தல் அல்லது விவசாயம் அல்லது விஞ்ஞான தொழில்நுட்பம் பாடம் அடங்கலாக உயிரியல் தொழில்நுட்பம் பிரிவில் 03 பாடங்கள் ஒரே அமர்வில் க.பொ.த. (சா.த.) பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந் திருத்தல் | |

**05. தொழில்நுட்ப சேவைக்கான சம்பள அளவுத் திட்டம் :**

இந்நியமனத்திற்குரிய சம்பளத்திட்டம் 2016.02.25 ஆந் திகதிய அரச நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் I ஆம் அட்டவணைக்கேற்ப MN-3-2016 சம்பள படி முறைக்கு உரித்தான ரூபா 31,040.00 - 445 x 10- 660 x 11- 730 x10 - 750 x 10-57,550.00 (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் - வகுப்பு 111) ஆகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நிமைனம் செயற்படும் தினத்திலிருந்து உமக்கு சம்பளம் வழங்கப்படும்.

கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (பயிற்சி தரம்) இற்கு அரச நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் V வது அட்டவணையின்படி மாதாந்தக் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

**06. தொழில்நுட்ப சேவைக்கான போட்டிப் பரீட்சையின் விடயப்பரப்பு :**

(i). நுண்ணறிவுப் பரீடசை - காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)
இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் மொழியறிவு, கணித அறிவு மற்றும் தர்க்க ரீதியான சிந்தனை ஆகியவற்றை அளவிடுவதற்கான பல் தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ii). பாடப்பரப்புடனான தொழிநுட்ப பரீட்சை காலம் 02 மணித்தியாலம் (100 புள்ளிகள்) எழுத்துப் பரீட்சை கால்நடைக் கட்டுப்பாடு

(1) தற்போதைய வளங்கள், சாத்தியங்கள், விவசாயம் மற்றும் விலங்குகன் தற்போதைய நிலைமை மற்றும் பொருளாதாரம் பங்களிப்பு.
(2) இலங்கையில் விலங்கு உற்பத்திகளின் உற்பத்தி முறைகள், உற்பத்தி அளவு மற்றும் சந்தைப்படுத்துதல், இலங்கையில் உள்ள ஒரு பண்ணை மாதிரி, அவற்றின் இடங்கள் மற்றும் விநியோகம்
(3) பண்ணை விலங்குகள் இனப்பெருக்கம் செய்ய அடிக்கடி பயன்படுத்தப்படும் முறைகள்.
(4) தீங்கு விளைவிக்கும் விலங்கு நோய்களைத் தடுப்பதற்கான முறைகள், நோயுற்ற விலங்கு மாதிரிகள் சேகரித்தல் மற்றும் போக்குவரத்து
(5) ஒருங்கிணைந்த பண்ணை முறைகள் மற்றும் மறுசுழற்சி முறைகள்.
(6) விலங்கு கட்டுப்பாடு தொடர்பான தொழில் - பால், இறைச்சி, முட்டை மற்றும் விலங்கு உணவு உற்பத்தி.
(7) விலங்கு கட்டுப்பாடு, பண்ணை அறிக்கை மற்றும் பகுப்பாய்வு கணக்குகள், விலங்கு பண்ணை திட்டமிடல் தொடர்பான வருமானம் மற்றும் செலவுகள் கணக்கிட முறைகள்.
(8) விஞ்ஞான தகவல் தொடர்பு வழிமுறைகளின் பயன்கள் மற்றும் அவற்றின் உற்பத்தித்திறன்.

**07. விண்ணப்பிக்கும் முறை :**

7.1 எல்லாப் பரீட்சார்த்திகளும் மேல் மாகாண சபைக்கு பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும். இப்பரீட்சைக்கான கட்டணம் ரூ. 600.00 ஆகும். அக்கட்டணத்தினை, மேல் மாகாண சபை வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து மேல் மாகாணத்திலமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகமொன்றில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னராகப் பணமாகச் செலுத்தி உமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் ஒட்டவும். இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. முத்திரைகளோ காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7.2 பூரத்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2018.12.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழு, இலக்கம் 109, பிரதான வீதி, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் " மேல் மாகாண அரச சேவையில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரயர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018 " என குறிப்பிடப்படல் வேண்டும். இத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

7.3 விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு ஏற்பA4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்ககளையும் பயன்படுத்தி தயாரித்து பரீட்சார்த்தி தமதுகையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். இல்க்கம் 01 தொடக்கம் 7.1 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 7.2 தொடக்கம் உள்ள பகுதிகள் ஏனைய பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும். உரிய முறைப்படி தயாரிக்கப்படாத, பூர்த்தி செய்யப்படாத, உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்பிரதியை தம்முடன் வைத்திருத்தல் சிறந்தது.

7.4 விண்ணப்பம் படிவத்தினைத் தயாரிக்கும் போது தலைப்பிலுள்ள பெயரினை தமிழ்/சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும்.

7.5 இவ்வறிவித்தலில் குறிப்பிட்டவாறு தயாரிக்கப்பட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு குறித்த திகதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைக்குத் தோற்ற மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் இடமளிக்கப்படும். முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபால் சேவை தாமதம் அல்லது விண்ணப்பங்கள் தொலைந்து போதல் சம்மந்தமாக மேல் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு எதுவித பொறுப்பும் இல்லை. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு விளம்பரத்திற்கேற்ப உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிக்கும் வேளையில் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

7.6 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது குறித்து எதுவித அறிவித்தல்களும் வழங்கப்படாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதை தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தில் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 02 நாட்கள் கழிந்த பின்னும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அதுபற்றி மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழவிற்கு தெரியப்படுத்தல் வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தின் நிழற்பிரதி, பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டின் நிழற் பிரதி, ஆளடையாள அட்டை எண் ஆகியவற்றுடன் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

7.7 விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோர் தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்த மடியும். ஏனையோர் சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச பாடசாலையொன்றின் அதிபர், (ரூ. 498, 960.00 அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர்), விகாரையொன்றின் விகாராதிபதி, மாகுரு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர் ஆகிய ஒருவரினால் அத்தாடசிப்படுத்தல் வேண்டும்.

### 08. பரீட்சைக்கு தோற்றுதல்:

8.1 சரியான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும், தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் முதல் நாள் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளை பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

8.2 பரீட்சை நாடத்தவது தொடர்பாக மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ள சட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்படல் வேண்டும். அவற்றை மீறும் பட்சத்தில் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுவர்.

8.3 விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :
தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் விதத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக கீழ் வருவனவற்றிலொன்றை சமர்ப்பிக்கலாம்.

(i) ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.
(ii) குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட கடவுச்சீட்டு.

### 09. தவறான தகவல்களை சமர்ப்பித்தல் :

விண்ணப்பதாரியொருவருக்கு உரிய தகைமைகள் இல்லையென தெரியவரின், பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்வையின்போது அல்லது பரிட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும். விண்ணப்பதாரியொருவர் தெரிந்துகொண்டே தவறான தகவல்களை வழங்கியது அல்லது ஏதாவதொரு முக்கிய தகவலை மறைத்தது தெரியவரின் அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்பட இடமுண்டு.

### 10. பரீட்சை முறை :

(i) இப்பரீட்சையானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடாத்தப்படும்.
(ii) விண்ணப்பதாரியொருவர் தோற்றுகின்று அனைத்துப் பாடங்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

11. இப்பரீட்சையில் தகுதி பெற்ற விண்ப்பதாரிகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேறுகளை மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் விண்ணப்பதாரிகளுக்கு தெரியப்படுத்தல், தபால் மூலமாகவோ அல்லது மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தின் மூலமோ மேற்கொள்ளப்படும்.

12. இவ்விண்ணபப்பங் கோரும் அறிவித்தலில் உள்ளடக்கப்பட்ட/உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவிற்குரியதாகும்.

13. இவ்வர்த்தமான அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில அறிவித்தல்களில் வேறுபாடுகள் காணப்படுமிடத்து சிங்கள அறிவித்தல் வலிதுடையதாகும்.

14. இவ்வறிவித்தல் மற்றும் மாதிரி விண்ணப்பம் மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்திலும் வெளியிடப்படும்.

எம். ஜி. ஏ.தலகரத்தினா,
செயலாளர்,
மாகாண அரச சேவை ஆணைக் குழு,
மேல் மாகாணம்

**மேல் மாகாண அரச சேவையில் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (வகுப்பு 111) மற்றும் கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் (பயிற்சி தரம்) பதவிக்கு அட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018**

சுட்டெண் [ ]

1. அறிவித்தலின் இல. 01 இற்கமைய விண்ணப்பிக்கும் பதவி [ ]

2. மொழிமூலம்
(பொருத்தமான கூட்டில் √ இடுக)

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

3. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
(ii) முழுப்பெயர் (சிங்களம்/தமிழ்) : ..........................................................................
(iii) முழுப்பெயர் (ஆங்கில கெபிடல் எழுத்துகளில்) : ..........................................................

(iv) தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

4. (i) நிரந்தர முகவரி(சிங்களம்/தமிழ்)
(ii) நிரந்தர முகவரி (ஆங்கில கெபிடல் எழுத்துகளில்)-
(iii) நிரந்தர முகவரி அமைந்துள்ள மாவட்டம் - (பொருத்தமான கூட்டில் √ இடுக)

கொழும்பு : [ ] கம்பஹா : [ ] களுத்துறை : [ ]

(iv) விண்ணப்ப முடிவுத்திகதியான 2018.12.23 இல் குறிப்பிட்ட மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்த காலம்

வருடங்கள் : [ ] மாதங்கள் : [ ] நாட்கள் : [ ]

(v) தொலைபேசி இலக்கம் : ..............................................................

5. (i) பிறந்த திகதி : ஆண்டு : ☐ மாதம் : ☐ திகதி : ☐

(ii) விண்ணப்ப முடிவுத்திகதியான 2018.12.23 இல் வயது :
வருடங்கள் : ☐ மாதங்கள் : ☐ நாட்கள் : ☐

6. பால் - (பொருத்தமான கூட்டில் √ இடுக)
பெண் : ☐ ஆண் : ☐

7. கல்வித்தகைமைகள் அறிவித்தலின் - (அறிவித்தலின் இல. 6 இற்கமைய தகைமைகள் ) :

7.1 அறிவித்தலுக்கமைய க.பொ.த.(சா./த.) தகைமைகள்

| இல. | பாடம் | சித்தி | இல. | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1.<br>2.<br>3.<br>4.<br>5. | | | 6.<br>7.<br>8.<br>9.<br>10. | | |

7.2 அறிவித்தலிற்கமைய க.பொ.த.(உ./த.) தகைமைகள் :

| | பாடம் | சித்தி | | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| 1.<br>2. | | | 3.<br>4. | | |

7.3 தொழில்நுட்ப தகைமைகள் :

| நிறுவனம் | கற்ற பாடப்பரப்பு | பாடத்தின் காலப்பகுதி | சித்தி | சான்றிதழ்களின் எண்ணிக்கையும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

8. பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம் : ................................................
திகதி : ................................................
பணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் : ................................................

| பற்றுச்சீட்டினை இங்கே ஒட்டவும் |
|---|

9. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

நான் இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் உறுதிப்படுத்துகிறேன். இதில் உள்ள அனைத்துப் பகுதிகளும் பூரணப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வுறுதிப்படுத்தல் பொய்யானது என தெரியவரின் நான் நியமனத்திற்கு தகுதியற்றவனாவேன் என நான் அறிவேன். மேலும், மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவின்

சட்டதிட்டங்களுக்குட்படுவேன், பரீட்சை நிபந்தனைகளுக்கு தகுதியற்றதாக நிரூபிக்கப்பட்டால் எனது விண்ணப்பம் செல்லுபடியற்றதாக்கப்படுவதற்கு நான் உடன்படுகிறேன்.

திகதி :................................ கையொப்பம் : ................................

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல் :
இவ்விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ................................ என்பவரை எனக்குத் தனிப்பட்டமுறையில் தெரியும் எனவும், எனது முன்னிலையில் .............................. தேதி ஒப்பமிட்டார் எனவும் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

......................................
கையொப்பமும் முத்திரையும்

தற்போது அரச அல்லது மாகாண அரச சேவையிலுள்ளோர் தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்த முடியும். ஏனையோர் சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச பாடசாலையொன்றின் அதிபர், (ரூ. 498,960.00 அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரச சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர்), விகாரையொன்றின் விகாராதிபதி, மதகுரு, முப்படையின் அதிகாரி அதிகாரமுள்ள அலுவலர் ஆகிய ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தல் வேண்டும்.

12- 30/1

---

**மேல் மாகாண அரச சேவையில் விவசாயத் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவியாளர் வகுதியின் குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018**

மேல் மாகாண அரச சேவையில் கீழ்க்குறிப்பிடப்படும் பதவி வெற்றிடங்களுக்கு தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. 1.1 பொதுத் தகைமைகள்**

(i) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
(ii) சிறப்பான நன்நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.
(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னர் ஆகக்குறைந்தது 03 வருடங்களாவது மேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிப்பவராயிருத்தல்
(iv) மதகுருவாக இருப்பவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவார்கள்
(v) விண்ணப்பங்கள் கோரப்பட்ட விளம்பரத்திற்கமைய அனைத்து தகைமைகளையும் பூர்த்திசெய்தவராகவும் வயது எல்லையை கொண்டிருப்பவருமே தகுதியான விண்ணப்பதாரியாக கருதப்பட்டு பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்
(vi) விண்ணப்ப முடிவுத் திகதியில் 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
(vii) நியமனம்பெற தகுதிபெற்றவர்கள் இடமாற்றத்திற்கு உட்படுத்தப்படுவதுடன் மேல் மாகாணத்தின் எல்லைக்குட்பட்ட எப்பகுதியிலும் சேவையாற்றவேண்டும்.
(viii) மேல் மாகாணத்தின் எம்மாவட்டத்திலும் சேவையாற்றுவதற்குத் தகுதியான நல்ல மனோ மற்றும் உடல் ஆரோக்கிய நிலையில் இருத்தல் வேண்டும்.

**02. சேவை நிபந்தனைகள்**

2.1 இந்நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியக் கொடுப்பனவுடையது. உமக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்கு நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

**03. ஆட்சேர்ப்பு முறை**

திறந்த முறையின் கீழ் மட்டும்

3.1 திறந்த போட்டிப் பரீட்சை ஒன்றின் புள்ளி ஒழுங்கு அடிப்படையில் தகுதிகளை பரீட்சிப்பதற்கான பொது நேர்முகத்தேர்விற்கு உட்படுத்தப்பட்டு ஆட்சேர்ப்பு இடம்பெறும்.

3.2 எழுத்துப் பரீட்சை :

| பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளிகள் | தகுதிப் புள்ளி வீதம் |
|---|---|---|---|
| நுண்ணறிவு பரீட்சை | 01 மணி | 100 | 40% |
| பாடப்பரப்புடனான தொழில்நுட்ப பரீட்சை | 02 மணி | 100 | 40% |

**04. தொழில்நுட்ப சேவையில் குடியேற்ற உத்தியோகத்தர் (வகுப்பு 111) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான கல்வி மற்றும் தொழில்நுட்ப தகைமைகள்**

| இல. | பதவி | க.பொ.த.(சா.த.) தகைமைகள் | க.பொ.த.(உ.த.) தகைமைகள் | தொழில்நுட்ப தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | (குடியேற்ற உத்தியோகத்தர் வகுப்பு 111) | சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதத்துடன் இன்னும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் ( 06) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் | க.பொ.த. (உ.த.) பரீட்சையில் உயிரியல், இரசாயனம், விவசாயம், விலங்கியல், தாவரவியல் மற்றும் பௌதீகவியல் ஆகிய பாடங்களிலிருந்து 03 பாடங்கள் ஒரே தடவையில் (சாதாரணப் பொதுப் பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல். | 1. விவசாயத்தில் 02 வருட டிப்ளோமா சான்றிதழை பின்வரும் விவசாய கல்லூரி ஒன்றிலிருந்து பெற்றிருத்தல் வேண்டும். குண்டசாலை, அகுணகொலபெலெஸ்ஸ, பெல்வெகர, பிபில, லபுதுவ, வாரியபொல, வவுனியா, அனுராதபுரம், கரபிஞ்சா, பாலமுனை, நய்வல மற்றும் பரந்தன்.<br><br>அல்லது<br><br>2. அம்பாறை, ஹாடி தொழில் நுட்ப நிறுவனத்தில் பெற்றுக் கொண்ட விவசாய தேசிய டிப்ளோமா சான்றிதழ்<br><br>அல்லது<br><br>3. அக்குவானஸ் கல்லூரியில் பெற்றுக் கொண்ட விவசாய டிப்ளோமா சான்றிதழ்<br><br>அல்லது<br><br>4. மூன்றாம் நிலை தொழில் பயிற்சி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் பெற்றுக் கொண்ட ஒருவருட முழு நேரக் காலப்பகுதியைக் கொண்டமைந்த விவசாய பயிற்சி சான்றிதழ் |

| இல. | பதவி | க.பொ.த.(சா.த.) தகைமைகள் | க.பொ.த.(உ.த.) தகைமைகள் | தொழில்நுட்ப தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | அல்லது<br>5. NVQ- 6 மட்டத்தை பூரணப்படுத்துவதற்காக அமைந்த தகுதியைக் கொண்டிருப்பது.<br>6. மூன்றாம் நிலை தொழில்பயிற்சி ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதான மேற் குறிப்பிட்ட தகைமைகளுக்கு இணையான தகுதியைக் கொண்டிருப்பதும் |

**05. தொழில்நுட்ப சேவைக்கான சம்பள அளவுத் திட்டம்**

இந்நியமனத்திற்குரிய சம்பளத்திட்டம் அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 03/2016 இன் I ஆம் அட்டவணைக்கேற்ப MN-3-2016 சம்பள படிமுறைக்கு உரித்தான ரூபா 31,040.00 - 445 x 10- 660 x 11- 730 x10 -750 x 10- ரூபா 57,550.00 (குடியேற்ற உத்தியோகத்தர்) ஆகும். இச்சுற்றறிக்கையின் அட்டவணை II இன் ஏற்பாடுகளுக்கமைய நியமனம் செயற்படும் தினத்திலிருந்து உமக்கு சம்பளம் வழங்கப்படும்.

**06. தொழில்நுட்ப சேவைக்கான போட்டிப் பரீட்சையின் விடயப்பரப்பு**

(i) நுண்ணறிவுப் பரீட்சை - காலம் 01 மணித்தியாலம் (100 புள்ளிகள்)
இவ்வினாத்தாளானது விண்ணப்பதாரியின் மொழியறிவு, கணித அறிவு மற்றும் தர்க்க ரீதியான சிந்தனை ஆகியவற்றை அளவிடுவதற்கான பல் தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும்.

(ii) பாடப்பரப்புடனான தொழில்நுட்ப பரீட்சை காலம் 02 மணித்தியாலம் (100 புள்ளிகள்)

01. இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு
  (i) மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு
  (ii) வேலைவாய்ப்பு
  (iii) விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதி நிலை

02. இலங்கையின் காலநிலை வலயங்கள் தொடர்பான அறிவு

03. மண் மற்றும் தாவரவளர்ப்பு
  (i) மண் கட்டமைப்பு, பௌதீக மற்றும் இரசாயனத் தன்மை மற்றும் பயிர்கள் மீதான அதன் தாக்கம்.
  (ii) பயிர் ஊட்டம், மண்/பயிர் நிர்வாகம்
  (iii) பயிர் ஊட்டம் தொடர்பில் சிறப்பு ஏற்பாடுகள்

04. மண் இரசாயனங்கள், மண் பாதுகாப்பு மற்றும் பல்வேறு மண் பாதுகாப்பு முறைகளின் முக்கியத்துவம்

05. நீர்ப்பாசனஅமைப்புகள் மற்றும் நீர் முகாமைத்துவம்
  (i) பல்வேறு தாவரங்களுக்கான நீர் பாசன அமைப்பு மற்றும் அவற்றின் நீர் முகாமைத்துவம்
  (ii) நுண் நீர் முகாமைத்துவ அமைப்புகள்
  (iii) நீர் வடிகால் மற்றும் அதன் முக்கியத்துவம்

06. பண்ணை இயந்திரமயமாக்கல்
  (i) பண்ணை இயந்திரமயமாக்கலின் நன்மைகள் மற்றும் தீமைகள்
  (ii) நிலத்தை தயாரிக்க பயன்படும் விவசாய இயந்திரங்கள்

(iii) நீர் வழங்கல் மற்றும் தாவர பாதுகாப்புக்காக பயன்படுத்தப்படும் இயந்திரங்கள்
(iv) மேலே உள்ள இயந்திரங்களை கையாளுதல் மற்றும் பராமரிப்பு செய்தல்

07. விவசாய விநியோகம்
(i) விவசாயத் திட்டம் வியூகம் மற்றும் முறைகள்
(ii) விவசாயத் செயல்திட்ட தகவல்தொடர்பு முறைகள்

08. திசு வளர்ப்பு
(i) திசு வளர்ப்பு மற்றும் கடந்தகால தகவல்களைப் பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள்
(ii) திசு வளர்ப்பு பயன்பாடுகள், உதாரணங்கள்
(iii) திசு வளர்ப்பு நன்மைகள் மற்றும் தீமைகள்

09. தனிப்பயிர் வளர்ப்பு தொடர்பான அறிவு
(i) தனிப்பயிர் வளர்ப்பு தொடர்பான அறிவு
(ii) தனிப்பயிர் வளர்ப்பு முறைகள்

10. பயிர் பாதுகாப்பு
(i) தாவர பாதுகாப்பு(தாவர/மரபணு) முக்கியத்துவம்

11. மரபணு தொழில்நுட்டம்
(i) டி.என்.ஏ.இன் முக்கியத்துவம்
(ii) ஒரு மரபணு மற்றும் அதன் செயல்பாடு என்ன?
(iii) டி.என்.ஏ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான சந்தர்ப்பங்கள்
(iv) மரபணு பொறியியல் நுட்பங்கள் மூலம் தாவரங்களை மேம்படுத்துவதற்கான திறன்

12. இலங்கை மற்றும் மகாவலி திட்டத்தின் குடியேற்றத்தைப் பற்றிய அறிவு
(i) குடியேற்றத் திட்டங்களின் இடங்கள்
(ii) மகாவலி திட்டத்திற்கு சொந்தமான பகுதிகள்

13. நிலங்களைப் பயன்படுத்துவதற்கான திட்டங்களை தயாரிப்பதற்கான அறிவு

14. வரைபடங்களின் அறிவு
(i) பெரிய பரிமாணம், ராட் ரேசர், டம்பி நிலை, தியோடோர் லைடர்
(ii) 1:50,000- 1: 10,000 புள்ளி வரைபடம் மற்றும் இறுதி வரைபடத்தின் விவரங்கள்

15. இலங்கையில் உள்ள நிலப்பகுதிகளை பற்றிய அறிவு மற்றும் இலங்கையில் உள்ள சம்பந்தப்பட்ட திணைக்களங்கள், நிறுவனங்களை அறிதல்
அரசு நிலம், தனியார் நிலம், மற்றும் பரம்பரை நிலம்

16. நில அபிவிருத்தி மற்றும் விநியோகம் தொடர்பான திட்டங்கள் பற்றிய அறிவு
நில அபிவிருத்தி மற்றும் விநியோகத்திற்கான தற்போதைய
நிகழ்ச்சித்திட்டங்களின் அறிவு
நிலமற்றவர்களை அடையாளம் காணல்
பிம் சவியா திட்டம்
நூறு ஆயிரம் நிலத்தொகுதிகள் திட்டம்

17. நிலங்களை உரிமையாக்குவதை நிராகரிக்க பயன்படுத்தப்படும் ஆவணங்களின் அறிவு.
(i) மானியங்கள்
(ii) குத்தகை, ஸ்வரானபூமி, ஜெயபூமி, ரத்னபூமி, ரன்பீமா

**07. விண்ணப்பிக்கும் முறை:**

7.1 எல்லாப் பரீட்சார்த்திகளும் மேல் மாகாண சபைக்கு பரீட்சைக் கட்டணமொன்றைச் செலுத்த வேண்டும். இப்பரீட்சைக்கான கட்டணம் ரூ. 600.00 ஆகும். அக்கட்டணத்தினை, மேல் மாகாண சபை வருமானத் தலைப்பு 20-03-02-99 இற்கு வரவு வைத்து மேல் மாகாணத்திலமைந்துள்ள பிரதேச செயலாளர் அலுவலகமொன்றில் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னராகப் பணமாகச் செலுத்தி உமது பெயரில் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பத்துடன் ஒட்டவும். இக்கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது. முத்திரைகளோ காசுக் கட்டளைகளோ ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7.2 பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 2018.12.23 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு " செயலாளர், மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழு, இலக்கம் 109, பிரதான வீதி, பத்தரமுல்ல" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் " மேல் மாகாண அரசாங்க சேவையில் குடியேற்ற உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2018" என குறிப்பிடப்படல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

7.3 விண்ணப்பம் இவ் அறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவிலான ஒரு தாளின் இரு பக்கங்ககளையும் பயன்படுத்தி தயாரித்து பரீட்சார்த்தி தமது கையெழுத்தினால் பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 தொடக்கம் 7.1 வரை முதல் பக்கத்திலும், இலக்கம் 7.2 தொடக்கம் உள்ள பகுதிகள் ஏனைய பக்கத்திலும் அமையுமாறு விண்ணப்பம் தயாரித்தல் வேண்டும். உரிய முறைப்படி தயாரிக்கப்படாத, பூர்த்தி செய்யப்படாத, உரிய திகதிக்கு கிடைக்கப்பெறாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதியை தம்முடன் வைத்திருத்தல் சிறந்தது.

7.4 விண்ணப்பப்படிவத்தினைத் தயாரிக்கும் போது தலைப்பினை தமிழ்/சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுவது அவசியமாகும்.

7.5 இவ்வறிவித்தலில் குறிப்பிட்டவாறு தயாரிக்கப்பட்டு, பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு குறித்த திகதியில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சைக்குத் தோற்ற மேல் மாகாண அரச சேவை ஆணைக் குழுவினால் இடமளிக்கப்படும். முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபால்சேவை தாமதம் அல்லது விண்ணப்பங்கள் தொலைந்துபோதல் சம்மந்தமாக மேல் மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவிற்கு எதுவித பொறுப்பும் இல்லை. விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையொன்றிற்கு அழைக்கப்பட்டு விளம்பரத்திற்கேற்ப உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிக்கும் வேளையில் உரிய தகைமைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனத் தெரியவரின் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

7.6 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது குறித்து எதுவித அறிவித்தல்களும் வழங்கப்படாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அதை தெரியப்படுத்தும் அறிவித்தலொன்று மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் www.psc.wp.gov.lk எனும் இணையத்தில் வெளியிடப்படும். அவ்வறிவித்தல் வெளியிடப்பட்டு 02 நாட்கள் கழிந்த பின்னும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அதுபற்றி மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவிற்கு தெரியப்படுத்தல் வேண்டும். உம்மிடமுள்ள விண்ணப்பத்தின் நிழற்படப்பிரதி, பணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நிழற்படத் பிரதி, விண்ணப்பத்தினை பதிவுத் தபாலில் அனுப்பியதற்கான பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதி, ஆளடையாள அட்டை இலக்கம் ஆகியவற்றுடன் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

7.7 விண்ணப்பத்திலும் அனுமதி அட்டையிலும் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளோர் தமது திணைக்களத் தலைவர் அல்லது அவருக்குப் பதிலாக அதிகாரம் பெற்ற அலுவலரினால் அத்தாட்சிப்படுத்த முடியும். ஏனையோர் சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, அரச பாடசாலையொன்றின் அதிபர், (ரூ. 498, 960.00 அல்லது அதற்கு மேலான வருடாந்த சம்பளம் பெறும் அரச அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதிவி நிலை அலுவலர்), விகாரையொன்றின் விகாராதிபதி, மதகுரு, முப்படையின் அதிகாரி, அதிகாரமுள்ள அலுவலர் ஆகிய ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

**08. பரீட்சைக்கு தோற்றுதல் :**

8.1 சரியான முறையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரர்கள் தமக்குரிய பரீட்சை நிலையத்தில்

பரீட்சைக்குத் தோற்ற வேண்டும், தமது கையொப்பத்தினை அத்தாட்சிப்படுத்திய அனுமதி அட்டைகளைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் முதல் நாள் கையளித்தல் வேண்டும். அனுமதி அட்டைகளைப் பரீட்சை நிலையப் பொறுப்பதிகாரியிடம் கையளிக்காத விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்குத் தோற்ற முடியாது.

8.2 பரீட்சை நாடத்தவது தொடர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களுக்கு விண்ணப்பதாரிகள் உட்படல் வேண்டும். அவற்றை மீறும் பட்சத்தில் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் வழங்கப்படும் தண்டனைக்கு உட்படுவர்.

8.3 **விண்ணப்பதாரியின் ஆளடையாளம் :**

